முருகப்பெருமான் துணை

உலக ஞானத்தலைவன் முருகப்பெருமான் துறையூர் ஓங்காரக்குடில் ஆசான் ஆறுமுக அரங்க மகா தேசிகருக்கு அருளிய ஞான அறிவுரை ஆசி காண்டம்

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1439

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

07.09.2023, வியாழக்கிழமை

1. ஞானசக்தியே அரங்கா வாழ்க
ஞானபலமோடு தானதர்ம சக்தியும் கொண்ட
ஞானதேசிகனே கலியுக ஞானியே வாழ்கவாழ்க
ஞாலமதில் சுப்ரமணியர் யானும் உன் பெருமை கூறி நாட்டிடுவேன் ஞான அறிவுரை ஆசி
2. ஆசிதனை சோபகிருது வேங்கை திங்கள்
அரங்கனுக்கு இன்னும் பலம் கூட உரைப்பேன்
உரைக்கவே அரங்கனே கலியின் சிறந்த ஞானி
உண்மை சன்மார்க்கம் தந்தருளும் மாதவசி
3. குறைவின்றி அரங்கன் திருபாதம் பற்றி
குவலயத்தார் ஞானம் பயின்று வந்தால்
பயின்றுவர அவரவர்க்கும் பரிபூரணமாய்
பாடிடுவேன் பரிபக்குவ நிலைகள் கூடி
4. துரிதகதி பிறவாத பெரும் பேறு என்கின்ற
தூய்மையான அழியாமை எனும் ஞானம்
ஞானசித்தி உறுதியாகும் ஞானிகளை பூஜிக்கும் பலம் கூடி
ஞானிகளாவே மாறும் வல்லமையும் ஞானதேசிகன் அருளாலே கிட்டநேரும்
5. நேர்மைகொண்டு ஓங்காரக்குடில் நோக்கி
நிலவுலகில் தொடர்ந்துவந்தால் போதும்
வருவோர்க்கு வறுமை விலகும்
வளமான வாழ்வாக மாறி
6. மாறியே அவரவர் வாழ்விலும்
வல்லமையும் வரமும் வடிவேலன் என் சக்தியாகவே கிட்டி
கிட்டியே உலகோர் ஞானிகளாவர்
குறையிலா இந்த உலகத்தை மாற்றும்

7. இனிமை நிறைந்த ஞானவான்களாக
எல்லாம் அறிந்த ஞானிகளாக தேற்றம் கண்டு
கண்டுமே உலகோர் யுகமாற்றம் படைப்பர்
கருணைபட அரங்கன் தயவாலே உலகமெங்கும் ஞான ஆட்சித்தருவர்
ஞான அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—